பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
09 06 2023**FRIDAY** 6 45**AM**
வணக்கம், ஆல் இண்டியா ரேடியோ, சென்னை --மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தீவிரவாத அமைப்புகளின் செயல்பாடுகளுக்கு கனடா ஆதரவு அளித்தால், அது இந்தியாவுடனான உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. சந்திரனுக்கு ரோவர் விண்கலத்தை அனுப்பும் முயற்சி அடுத்த மாதம் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

3. காவிரி டெல்டா மாவட்டங்களில் நடைபெறும் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு செய்யவுள்ளார்.

4. விவசாயிகளுக்கான வேளாண் இடுபொருட்கள் தேவையான அளவு கையிருப்பில் உள்ளதாக மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் கூறியுள்ளார்.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் கிரிக்கெட் இறுதிப் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 151 ரன் எடுத்திருந்தது.

>>>>><<<<<

தீவிரவாத அமைப்புகளின் செயல்பாடுகளுக்கு கனடா ஆதரவு அளித்தால், அது இந்தியாவுடனான உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதை கொண்டாடும் வகையில், கனடாவில் சில தீவிரவாத அமைப்புகள் நிகழ்ச்சி நடத்தியதை சுட்டிக்காட்டி கருத்து தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், பிரிவினைவாதிகளுக்கும், தீவிரவாத அமைப்புகளுக்கும் கனடா இடம் தருவது, இருநாடுகளின் உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

700க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப கனடா எடுத்துள்ள முடிவு சரியானதல்ல என்றும், மாணவர்கள் தொடர்ந்து அங்கு படிப்பதற்கு, அந்நாட்டு அரசு அனுமதி அளித்திருக்க வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

சந்திரனுக்கு ரோவர் விண்கலத்தை அனுப்பும் முயற்சி அடுத்த மாதம் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

பெங்களூருவில் நேற்று நடைபெற்ற விண்வெளி திட்ட செயல்பாடுகள் குறித்த சர்வதேச மாநாட்டின் ஒரு பகுதியாக செய்தியாளர்களிடம் பேசிய இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் தலைவர் திரு. சோம்நாத், சந்திரனின் மேற்பரப்பில் ரோவர் விண்கலத்தை தரையிறக்கும் முயற்சியில் இஸ்ரோ தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக கூறினார்.

இதற்கான விண்கலம் தற்போது சோதனையில் உள்ளதாகவும், விரைவில் அது செலுத்து வாகனத்துடன் இணைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த செலுத்து வாகனம், இம்மாதம் இறுதிக்குள் தயாராகிவிடும் என்றும் திரு. சோம்நாத் கூறினார்.

>>>>><<<<<

காதி கிராம தொழில் ஆணையத்தின் விற்பனை கடந்த ஒன்பது ஆண்டுகளில் 332 சதவீதம் அதிகரித்துள்ளது.

சுயசார்பு இந்தியா இயக்கத்தின் கீழ், இந்த ஆணைய பொருட்களின் விற்பனை 1 லட்சத்து 34 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளது.

2014ஆம் ஆண்டுஇதன் விற்பனை 31 ஆயிரத்து 154 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இருந்ததாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஆணையத்தின் மூலம் ஊரகப்பகுதிகளில் 9 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காதி விற்பனையை அதிகரிக்க பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகளே காரணம் என்றும் காதி கிராம தொழில் ஆணையத்தின் தலைவர் திரு. மனோஜ்குமார் தெரிவித்தார்.

தற்போது, சர்வதேச அளவில் காதி பொருட்கள் மக்களின் நம்பிக்கையை பெற்றதாக திகழ்கிறது என்றும் அவர் கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் ஏழு பல்கலைக் கழகங்களில் மட்டுமே பட்டமளிப்பு விழா நடத்த அனுமதி கோரப்பட்டுள்ளதாக ஆளுநர் மாளிகை விளக்கம் அளித்துள்ளது.

இம்மாதம் 16ஆம் தேதி சென்னை பல்கலைக் கழகத்திலும், 19ஆம் தேதி திருவள்ளுவர் பல்கலைக் கழகத்திலும், 29ஆம் தேதி சேலம் பெரியார் பல்கலைக் கழகத்திலும் பட்டமளிப்பு விழாவை நடத்த தேதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் மாளிகையின் செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் கோவிட்-19 தொற்று காரணமாக, நடத்தப்படாமல் இருந்த பட்டமளிப்பு விழா மூன்றாண்டுகளுக்கு சேர்த்து, தற்போது நடத்தப்படவுள்ளது என்றும் ஆளுநர் மாளிகை கூறியுள்ளது.

கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு துணைவேந்தர் நியமிக்கப்படவில்லை என்றும், அந்த நியமனம் நடைபெற்றிருந்தால், பட்டமளிப்பு விழா நடத்த அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

முன்னதாக, நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. பொன்முடி, அரசு பல்கலைக் கழகங்களில் பட்டமளிப்பு விழா நடத்துவதற்கு, ஆளுநர் மாளிகை தேதி வழங்காததே காரணம் என்று கூறியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில், ஆளுநர் மாளிகை இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

>>>>><<<<<

காவிரி டெல்டா மாவட்டங்களில் நடைபெறும் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று ஆய்வு செய்யவுள்ளார்.

இதற்காக, நேற்றிரவு தஞ்சாவூர் சென்றடைந்த முதலமைச்சர், இன்று காலை அம்மாவட்டத்தில் நடைபெறும் தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிடுகிறார்.

கூழையாறு – புல்லம்பாடி பிரதான சாலையில் நந்தியாறு உள்ளிட்ட இடங்களில் நடைபெறும் பணிகளை ஆய்வு செய்யவுள்ள முதலமைச்சர், பின்னர் திருச்சி செல்கிறார்.

>>>>><<<<<

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், கிண்டியில் கட்டப்பட்டுள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நடைபெற்று வரும் இறுதிகட்டப் பணிகளை நேற்று ஆய்வு செய்தார்.

கிண்டியில் உள்ள கிங்ஸ் நோய்த்தடுப்பு ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 230 கோடி ரூபாய் செலவில் 6 தளங்களுடன் இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

6 லட்சம் சதுர அடி பரப்பளவில் உலகத்தரத்தில் அதிநவீன வசதிகளுடன் ஆயிரம் படுக்கைகளை கொண்டதாக இந்த மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேல்நிலைக் கல்வி முடித்த மாணவ மாணவிகள் சுயதொழில் கற்றுக் கொண்டு தனியாக தொழில் தொடங்க, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அரசு தொழிற்பயிற்சி மையங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

திண்டிவனம் அரசு தொழிற்பயிற்சி மையத்தை நேற்று, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், காணொலி வாயிலாக திறந்து வைத்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் 22 இடங்களில் சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழில்நுட்ப மையம் திறக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த மையங்களில் அளிக்கப்படும் பயிற்சி, மாணவ மாணவிகள் சுயமாக தொழில் தொடங்க உதவும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மேட்டூர் அணையிலிருந்து வரும் திங்கட்கிழமை தண்ணீர் திறக்கப்படவுள்ள நிலையில், விவசாயிகளுக்கு வழங்க தேவையான வேளாண் இடுபொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

மன்னார்குடி அருகேயுள்ள பாமணி-யில் உரத் தொழிற்சாலையை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பெரியகருப்பன் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் நாளை பொதுவிநியோகத் திட்ட சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

ரேஷன் அட்டைகளில் பெயர் மாற்றம், முகவரி மாற்றம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை இந்த முகாம் மூலம் பொதுமக்கள் பெறலாம் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளதாக, எமது செய்தியாளர் சுரேஷ் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - சுரேஷ் 22 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

ஆப்கானிஸ்தானில் நேற்று நிகழ்ந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

செர்பியாவில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சவுதி அரேபிய இளவரசர் சல்மான் பின் அப்துலாசிஸ் அல் சவுத்-துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இருதரப்பு உறவுகள் குறித்து பேசினார்.

>>>>><<<<<

மணிப்பூர் மாநிலத்தில் தொடர்ந்து அமைதி நிலவி வருவதாகவும், கடந்த 48 மணிநேரத்தில் எந்தவித அசம்பாவித சம்பவமும் நடைபெறவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் தொடர்பான அறிவிப்புப் பலகையை கட்டாயம் வைக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

>>>>><<<<<

தருமபுரி மாவட்டத்தில் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருத்தரங்கம், ஆட்சியர் திருமதி. சாந்தி தலைமையில் நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

டாஸ்மாக் கடைகளில் திரும்ப பெறப்படும் பாட்டில்களை விற்பதற்கான டெண்டர் விதிகள் மற்றும் விலையை, அறிக்கையாக தாக்கல் செய்ய மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் கிரிக்கெட் இறுதிப் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 151 ரன் எடுத்திருந்தது.

ரஹானே 29 ரன்னுடனும், ஸ்ரீகார் பாரத் 5 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

>>>>><<<<<

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் நேற்று, இந்தியா 3-0 என்ற கோல்கணக்கில் அர்ஜென்டினாவை வென்றது.

>>>>>END<<<<<